[1990 மே 11

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன் வடிவு அறி முகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ,)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடி வினைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.

10–55 மணி

8. சட்ட முன்வடிவுகள்—(ஆய்வு செய்தல்).

(அ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 33/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏதேனும் முன்னுரையாகக் கூற விரும்பி னால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, தங்கள் அனுமதியுடன் இந்த சட்டமுன்வடிவு குறித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கள் விவாதத்திலே கலந்துகொள்வதற்குத் துணையாக சில கருத்துக்களை எடுத்துக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 1989ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சி அமைந்த பிறகு

---

* 9–5–1990ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.